# மலைமேல் நின்று.



மலைமேல் நின்று அருள் புரிகின்ற வேங்கடவனே,

மலைபோல் இன்று நம்பிவந்தான் இந்த அடியவனே!

மலைமேல் நின்று.....

மலையேழு எங்கனம் கடப்பேனென்று ,

மலைத்து நின்ற என்தன் உள்ளத்தினை;

மலைபோல் உறுதியாய் செயல்படவைத்து ,

மலைமேல் ஏறச்செய்து காட்சி தந்தவனே!

மலைமேல் நின்று.....

மலைத்தேன் உண்டுகளிக்கும் மந்தி வாழ் ,

மலைமீது உறைகின்ற உன்தனைக்கண்டு;

மலைத்தேன் என் செய்வதென்று அறியாமல் ,

மலையப்பா உனை இன்று சரணடைந்தேன்!

மலைமீது நின்று...